2020 செப்டம்பர் 15]

அதுமட்டுமல்ல, இப்பொழுது சில்லாநத்தம் பகுதியில் இருக்கின்ற வீரபாண்டியபுரம், ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில் இருக்கிறது. ஒட்டப்பிடாரம் வட்டத்தில் வீரபாண்டியபுரம் தெற்குப் பகுதியில் கிட்டத்தட்ட 1,224 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு ready ஆக இருக்கிறது. சில்லாநத்தம் பகுதியில் 406 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு வருகின்றது. நிலத்தைக் கையகப்படுத்திய பின், ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில் நிச்சயமாக தொழிற்சாலைகள் அமையும். ஒட்டுமொத்த வளர்ச்சிதான் மாநில முதலமைச்சர் அவர்களுக்கு முக்கிய எண்ணம் என்பதைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். அந்த அளவில், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வதெல்லாம், இந்தத் திட்டம் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் விதி 110–ன்கீழ் அறிவிக்கப்பட்டது. தென் மண்டல வளர்ச்சிக்கு பல்வேறு சலுகைகள்; இன்றைக்கு சென்னைக்கு சலுகைகள் இல்லை, ஓசூருக்கு சலுகைகள் இல்லை, கோயம்புத்தூருக்கு சலுகைகள் இல்லை. தென் மண்டலத்தில் இருக்கின்ற 9 மாவட்டங்கள், இன்றைக்கு 10 மாவட்டங்களாக சேர்ந்திருக்கின்றன. 10 மாவட்டங்களின் வளர்ச்சிக்காக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செயல்பட்டு வருகின்றார்கள் என்பதைக் குறிப்பிட்டு இந்த மனைகளெல்லாம் உருவாக்கப்படும்போது நிச்சயமாக ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில் தொழிற்சாலைகள் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திரு. ர. முத்தமிழ்செல்வன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

8—

கோ—ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள்

***64156—திரு. ர. முத்தமிழ்செல்வன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[*2020 செப்டம்பர் 15*

(அ) விக்கிரவாண்டி தொகுதி, விக்கிரவாண்டி பேரூராட்சியிலும், காணை ஒன்றியம், காணையிலும் கோ—ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தம்பி வா, தலைமை தாங்க வா, ஆணையிடு ஏற்று நடக்கிறேன் என்ற பேரறிஞர் பெருந்தகை அண்ணாவின் தம்பிகள், உலகையே அச்சுறுத்தி வரும் கொரோனா காலத்தில் தமிழகமெங்கும், எட்டுத் திக்கும் சுற்றிச் சுழன்று, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுப் பணியை, கடமையை ஆற்றி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) விக்கிரவாண்டி தொகுதி, விக்கிரவாண்டி பேரூராட்சியிலும், காணை ஒன்றியம், காணையிலும் கோ—ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் அமைக்க அரசு முன்வருமா என்று மாண்புமிகு விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார்கள். விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி, விக்கிரவாண்டி பேரூராட்சிப் பகுதியிலும் மற்றும் காணை ஒன்றியம், காணை பகுதியிலும் கோ—ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் துவங்குவது குறித்த செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ர. முத்தமிழ்செல்வன் அவர்கள்.

திரு. ர. முத்தமிழ்செல்வன்: தமிழ் காத்து, தமிழகம் காத்து, தன் நலம் கருதாமல் தவ வாழ்க்கை வாழ்ந்து, தமிழக மக்களுக்காக அல்லும் பகலும் அயராது உழைத்திட்ட இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயில் கொள்ளும் திசை நோக்கி வணங்குகிறேன்.

தமிழக மக்களுடைய இதயத்திலே நீக்கமற நிறைந்திருக்கின்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் உறங்கும் திசை நோக்கி வணங்குகிறேன். உலகத்தையே அச்சுறுத்துகிற கொரோனா

2020 செப்டம்பர் 15]

என்கின்ற கொடிய நோய் பரவலிலிருந்து தமிழகத்தையும், தமிழக மக்களையும் மிகச் சாதுரியமாகப் பாதுகாத்து, தமிழக மக்களின் ஒட்டுமொத்த ஆதரவினைப் பெற்று, மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களுடைய நல்லாட்சியை தாய் உள்ளத்தோடு நடத்திக் கொண்டிருக்கிற விவசாயிகளின் முதலமைச்சர், உலகமே அஞ்சி நடுங்குகிற கொரோனா என்கின்ற கொடிய அரக்கனைக் கண்டு அஞ்சிடாமல் எதிர்கொண்டு, சிங்கமென புறப்பட்டு, செல்கின்ற இடமெல்லாம் ஜெயக்கொடி நாட்டி, மாவட்டந்தோறும் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு, தமிழகத்தில் நல்லாட்சி புரிந்துகொண்டிருக்கின்ற மாண்புமிகு மரியாதைக்குரிய ஐயா தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களுடைய பாத மலர்களைப் பணிந்து வாழ்த்த வயதின்றி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், இந்த ஆட்சிக்கும், கழகத்திற்கும் உறுதுணையாக, தோளோடு தோள் நின்று இந்த ஆட்சியை நல்லாட்சியாக நடத்திக் கொண்டிருக்கின்ற தமிழகத்தின் துணை முதலமைச்சர் அவர்களையும் இந்த நேரத்திலே பணிந்து வணங்குகிறேன்.

விழுப்புரம் மாவட்டத்தை வலிவோடும், பொலிவோடும் வழிநடத்திக் கொண்டிருக்கின்ற மாவட்டத்தினுடைய அமைச்சரும், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சரும், எங்களுடைய வழிகாட்டியுமான மரியாதைக்குரிய அண்ணன் அவர்களை இந்த நேரத்திலே பணிந்து வணங்குகிறேன். தன்னுடைய அயராத உழைப்பால், ஓய்வறியாத உழைப்பால் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திட்டங்களைத் தீட்டி, செயலாற்றி வருகிறார்கள். இந்த வேளையிலே, விழுப்புரம் மாவட்டத்திற்குக் கடந்த 9 ஆம் தேதி வருகை தந்து, கொரோனா பாதிப்பு குறித்து ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளும்போது விவசாயிகளுடனும், மகளிர் சுய உதவிக் குழுக்களுடனும், தொழில் துறையைச் சார்ந்தவர்களுடனும் அவர் நடத்திய கலந்துரையாடலைக் கண்டு நான் மெய் மறந்தேன். ஒரு முதலமைச்சர் சாதாரண எளியவர்களையும் அழைத்து, அவர்களுடைய கருத்துகளையும் கேட்டு, ஆய்ந்தறிந்து, தொகுதி வளர்ச்சிப் பணிகளைப் பற்றி பேசியபோது, உண்மையிலேயே நான் இந்தப் பிறவியிலே பெற்ற பயனை அடைந்தேன் என்றுதான் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த நல்லாட்சியிலே, தொகுதி மக்களின் நீண்ட கோரிக்கையான நந்தன்

கால்வாய்த் திட்டத்திற்கு 28 கோடி ரூபாயை தாயுள்ளத்தோடு வாரி வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய பாத மலர்களை நான் பணிந்து வணங்குகிறேன்.

முற்பகல் 11–15

என்னுடைய காணை ஒன்றியத்திற்குட்பட்ட ஒன்றிய அலுவலகத்திலே வணிக வளாகக் கட்டடத்தைத் திறந்து வைத்தமைக்கு, காணை ஒன்றியக் கழகத்தின் சார்பாகவும், விக்கிரவாண்டி தொகுதி மக்களின் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியினை தங்களுடைய பாத மலர்களிலே பணிந்து சமர்ப்பிக்கின்றேன். மேலும், நடந்து முடிந்த விக்கிரவாண்டி தொகுதி இடைத் தேர்தலிலே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் மற்றும் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களும், தங்களுடைய அயராத உழைப்பினால், அளப்பரிய, மிகப் பெரிய வெற்றியினை இந்திய வரலாற்றிலே படைத்தார்கள். நாங்கள் கேட்ட திட்டங்களையெல்லாம் செயல்படுத்தினார்கள். என்னுடைய தொகுதிக்குட்பட்ட விக்கிரவாண்டி பேரூராட்சியிலே ஒரு கைத்தறி விற்பனை நிலையத்தையும், எனது காணை ஒன்றியத்திற்குட்பட்ட காணை கிராமத்திலே ஒரு கைத்தறி விற்பனை நிலையத்தையும் அமைத்துத் தர வேண்டுமென்ற என்னுடைய தொகுதி மக்களின் கோரிக்கையினை உங்கள்முன், கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டோடு இந்த அவையை நடத்துகின்ற மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள திருக்கோவிலூர், திண்டிவனம், விழுப்புரம் ஆகிய பகுதிகளில் நான்கு கோ–ஆப்டெக்ஸ் கடைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற விக்கிரவாண்டி மற்றும் காணை பகுதிகள் கிராமங்கள் அடங்கிய பகுதிகளாகும். பெரிய நகரங்களோ, வீதிகளோ, பெரிய கடைகளோ இல்லாத பகுதியாக இருக்கிறது. மேலும், தமிழகத்தில் கோ–ஆப்டெக்ஸ் கடைகள் கடந்த 6 மாத காலமாக கொரோனா தாக்கத்தினால், முற்றிலுமாக மூடிக்

2020 செப்டம்பர் 15]

கிடக்கின்றன; நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, வருங்காலத்தில் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ர. முத்தமிழ்செல்வன் அவர்கள்.

திரு. ர. முத்தமிழ்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய பரிசீலனையில் இல்லையென்றாலும், தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டு கொடுக்கிறவர் அல்ல, கேட்காமலேயே அள்ளி, அள்ளி கொடுக்கின்றவர். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதி மக்களின் கோரிக்கையினை நிறைவேற்றித் தர வேண்டுமென இந்த நேரத்திலே பணிந்து கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

9—

செயற்கை கருத்தரிப்பு மருத்துவ வசதி

***57208—திரு. த. மனோ தங்கராஜ்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பத்மநாபபுரம் தொகுதி, தக்கலை அரசு மருத்துவமனையில் செயற்கை கருத்தரிப்பு மருத்துவ வசதி ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டை நமக்குக் கற்றுக் கொடுத்த பேரறிஞர் அண்ணா அவர்களை வணங்குகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்களுடைய வழியிலே ஆட்சியையும், கட்சியையும் வழிநடத்திய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். அம்மா அவர்களின் வழியிலே